RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 301 | நவம்பர்.1 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு அழைப்பு தவெகவை பல்ஸ் பார்க்கிறதா திமுக?

சென்னை, நவ.01-

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி (எஸ்ஐஆர்) குறித்து விவாதிக்க 2ம் தேதி அனைத்து கட்சி கூட்டத்தை திமுக கூட்டியுள்ளது. இதில் கலந்து கொள்ளுமாறு திமுக சார்பில் பூச்சி முருகன் தவெகவுக்கு நேரில் சென்று அழைப்பு விடுத்துள்ளார்.



பாஜகவை எதிர்க்கும் கட்சிகளை ஓரணியில் திரட்டி தக்க வைத்திருக்கும் திமுக, தங்களின் கொள்கை எதிரி என்று பாஜகவை அறிவித்திருக்கும் தவெகவையும் அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அழைத்திருப்பதன் பின்னணியில் பல அரசியல் கணக்குகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. பாஜக தங்களின் கொள்கை எதிரி என்று அறிவித்திருப்பதை உறுதிப்படுத்த தங்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பாக தவெக இதை மாற்றிக் கொள்ள முயலும்.

ஏற்கெனவே மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு தொடர்பாக கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிகூட்டத்தில் அக்கட்சி கலந்து கொண்டது. அதேபோல், எஸ்ஐஆர் தொடர்பான இந்தக் கூட்டத்திலும் தவெக கண்டிப்பாக கலந்து கொள்ளும் என்று திமுக எதிர்பார்க்கிறது. அப்படி கலந்து கொண்டால், தமிழக நலனுக்கு எதிராக எதுவும் நடந்தால் தங்களை கடுமையாக எதிர்க்கும் கட்சியுடனும் நாங்கள் கைகோத்து மாநிலத்தின் நலனைக் காப்போம் என்று காட்டிக்கொள்ள திமுக முயலும்.

அதேசமயம், நாங்கள் பாஜக, அதிமுகவை தவிர அனைத்துக் கட்சிகளையும் ஓரணியில் திரட்டி விட்டோம். உங்களுக்கு எதிராக அனைத்துக் கட்சிகளும் நிற்கின்றன என்று பாஜக கூட்டணிக்கு சவால் விடும் வாய்ப்பாகவும் திமுக இதைப் பயன்படுத்தலாம். ஒருவேளை, அனைத்துக் கட்சிகூட்டத்தை தவெக புறக்கணித்தால், "நாங்கள் முன்பே சொன்னதுபோல் பாஜகவின் மறைமுக ஆதரவில் தான் தவெக செயல்படுகிறது" என்று மக்கள் மன்றத்தில் திமுக பிரச்சாரம் செய்யும்.

இன்னொரு பக்கம், கரூர் விவகாரத்தை முன்வைத்து விஜய்யை தங்கள் பக்கம் இழுக்கும் முயற்சியில் இருக்கும் அதிமுக கூட்டணி, அதில் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதையும் இதன் மூலம் கணிக்க கணக்குப் போடுகிறது திமுக. கூட்டத்தில் தவெக பங்கெடுத்தால் அதிமுக கூட்டணிக்குச் செல்வது குறித்து அந்தக் கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை என்பதை தெளிவுபடுத்திக் கொள்ளலாம் என்பதும் திமுகவின் தந்திரம்.

இப்படி, அனைத்துக் கட்சிக் கூட்டம் தொடர்பாக தவெக எத்தகைய முடிவை எடுத்தாலும் அதைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளும் திட்டத்தில் தான் அவர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறது திமுக. திமுக வைத்திருக்கும் இந்த டெஸ்ட்டில் தவெக என்ன ட்விஸ்ட் வைக்கப் போகிறது என்பதை 2ம் தேதி பார்க்கலாம்.

# 'தமிழர்களுக்கும், பிஹார் மக்களுக்கும் பகை உண்டாக்கும் அற்ப அரசியல்'

## மோடிக்கு ஸ்டாலின் கண்டனம்

சென்னை: நவ.1-

தமிழர்களுக்கும், பிஹார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்ளும் அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு நாட்டின் நலன் மீது பிரதமர் கவனம் செலுத்த வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.




இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அடிக்கடி மறந்து, இதுபோன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒடிசா பிஹார் என்று எங்கு சென்றாலும், பாஜகவினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதல்வர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பிஹார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.,வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நேற்று பிஹாரில் நடந்த பிரச்சார கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, "திமுக ஆளும் தமிழ்நாட்டில் திமுகவினர் பிஹாரைச் சேர்ந்த உழைக்கும் மக்களை துன்புறுத்துகின்றனர்" என்று குற்றம்சாட்டியிருந்தார்.

## அமெரிக்காவில் 33 ஆண்டுக்கு பிறகு அணு ஆயுத சோதனை: அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், நவ.01-

அமெரிக்காவில் மீண்டும் அணு ஆயுத சோதனை நடத்தப்படும் என்று அந்த நாட்டு அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.



கடந்த 1945ம் ஆண்டு ஜூலை 16ம் தேதி அமெரிக்காவில் முதல் அணு ஆயுத சோதனை நடத்தப்பட்டது. அந்த நாடு இதுவரை 1,054 அணு ஆயுத சோதனைகளை நடத்தி உள்ளது. கடைசியாக கடந்த 1992ம் ஆண்டு செப்டம்பர் 23ம் தேதி அமெரிக்காவின் நெவாடா அணு சக்தி சோதனை நடத்தியதில் பூமிக்கடியில் 2,300 அடி ஆழத்தில் சோதனை நடத்தப்பட்டது.

சமீபத்திய புள்ளி விவரத்தின்படி அமெரிக்காவிடம் 5,044 அணு ஆயுதங்கள் உள்ளன. ரஷ்யாவிடம் இதே அளவுக்கு அணு ஆயுதங்கள் உள்ளன. சீனாவிடம் 550, பிரான்ஸிடம் 290, பிரிட்டனிடம் 225, இந்தியாவிடம் 180 அணு ஆயுதங்கள் உள்ளன.

ரஷ்யாவின் ஏவுகணை: இந்த சூழலில் ரஷ்யா அண்மையில் அணு சக்தியில் செயல்படும் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது. இது உலகின் முதல் அணு சக்தி இயங்குதள ஏவுகணை ஆகும். இந்த ஏவுகணை 14,000 கி.மீ. தொலைவு வரை சீறிப் பாயும். அணு சக்தியில் தொடர்ந்து 15 மணி நேரம் பறக்கும் திறன் கொண்டதாகும்.

வரும் 2030ம் ஆண்டுக்குள் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை 1,000 ஆக அதிகரிக்க சீன ராணுவம் திட்டமிட்டு உள்ளது. அந்த நாட்டில் கடந்த 1990ம் ஆண்டில் அணு ஆயுத சோதனை நிறுத்தப்பட்டது. ஆனால் சீன ராணுவம் ரகசியமாக அணு ஆயுத சோதனை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த சூழலில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் சமூக வலைதள பதிவில் நேற்று கூறியிருப்பதாவது: இதர நாடுகளைவிட அமெரிக்காவிடம் அதிக அணு ஆயுதங்கள் உள்ளன. எனது முதல் ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் புதுப்பிக்கப்பட்டன. தற்போதைய சூழலை கருத்தில் கொண்டு 33 ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்காவில் மீண்டும் அணு ஆயுத சோதனை நடத்த அறிவுறுத்தி உள்ளேன். இதன்படி அமெரிக்காவில் விரைவில் அணு ஆயுத சோதனை தொடங்கும்.

அதிக அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் நாடுகள் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. 2வது இடத்தில் ரஷ்யா, 3வது இடத்தில் சீனா உள்ளன. அணு ஆயுதங்களால் பேரழிவு ஏற்படும் என்பதை நன்கறிவேன். அணு ஆயுத சோதனைகளை நடத்த நான் விரும்பவில்லை. ஆனால் இதர நாடுகள் அணு ஆயுத சோதனைகளை நடத்தும் சூழலில் அமெரிக்காவிலும் அணு ஆயுத சோதனை நடத்த போர் துறையை அறிவுறுத்தி உள்ளேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## பிஹார் மக்களை திமுகவினர் துன்புறுத்துவதாக பிரதமர் கூறியது உண்மை - ஸ்டாலினுக்கு அண்ணாமலை பதில்

சென்னை, நவ.01-

"உழைக்கும் பிஹார் மக்களைத் திமுகவினர் துன்புறுத்துகின்றனர் என்று, நமது பிரதமர் கூறியது முழுக்க முழுக்க உண்மை. பிஹார் மக்களை துன்புறுத்தியதாக பிரதமர் திமுகவினரைக் குறிப்பிட்டதை, தமிழக மக்களைக் குறிப்பிட்டதாக முதல்வர் ஸ்டாலின் மடைமாற்ற முயற்சிக்கிறார்" என தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.



இது குறித்து அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "திமுகவின் ஊழலும், போலி வேடமும் மக்கள் மத்தியில் அம்பலப்படும் போதெல்லாம், அதனை மடைமாற்ற, மக்கள் மத்தியில் பிரிவினையைத் தூண்டுவது திமுகவின் வழக்கம். நகராட்சி நிர்வாகத் துறையில், ரூ.888 கோடி ஊழல் நடந்திருப்பது வெளியானவுடன், அதனை மறைக்கும் முயற்சியைத் தொடங்கியிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

உழைக்கும் பிஹார் மக்களைத் திமுகவினர் துன்புறுத்துகின்றனர் என்று, நமது பிரதமர் கூறியது முழுக்க முழுக்க உண்மை. தமிழக அமைச்சர்கள் பொன்முடி, டி. ஆர். பி. ராஜா, எம்பி தயாநிதி மாறன், ஆ.ராசா தொடங்கி, கடைக்கோடி திமுக நிர்வாகிகள் வரை, பிஹார் மக்களை ஏளனமாகப் பேசியதும், அவர்கள் மீது தாக்குதலுக்குத் தூண்டுவதைப் போல பேசியதும், தமிழக மக்கள் அறிவார்கள்.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இந்த காணொளியிலேயே, நமது பிரதமர் தமிழகத்தில், பிஹார் மக்களை திமுகவினர் துன்புறுத்துகிறார்கள் என்று பேசியிருப்பது தான் இருக்கிறது.

எப்படி, திமுகவினர் தமிழகத்தின் அவமானச் சின்னமாக இருக்கிறார்களோ, அதே போல, பிரதமர் திமுகவினரைக் குறிப்பிட்டதை, தமிழக மக்களைக் குறிப்பிட்டதாக மடைமாற்ற முயற்சிப்பது, ஸ்டாலின் வகிக்கும் முதல்வர் பதவிக்கே அவமானம். தாத்தா காலத்தில் தொடங்கிய இந்த அற்ப அரசியலை, பேரன் காலத்திலும் தொடர்வதை, முதல்வர் நிறுத்திக் கொள்ள வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இன்று முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அடிக்கடி மறந்து, இதுபோன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒடிசா பிஹார் என்று எங்கு சென்றாலும், பாஜகவினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதல்வர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக் களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பிஹார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.,வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நேற்று பிஹாரில் நடந்த பிரச்சார கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, " திமுக ஆளும் தமிழ்நாட்டில் திமுகவினர் பிஹாரைச் சேர்ந்த உழைக்கும் மக்களை துன்புறுத்துகின்றனர்" என்று குற்றம்சாட்டியிருந்தார்.

## மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 1,429 சுகாதார ஆய்வாளர்கள் விரைவில் நியமனம்

சென்னை, நவ.01-

விரைவில் நியமிக்கப்பட உள்ள 1,429 சுகாதார ஆய்வாளர்கள் (கிரேடு 2) பணிக்கு நவம்பர் 16ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு: தமிழ்நாடு பொது சுகாதார சார்நிலைப் பணியின்கீழ் வரும் சுகாதார ஆய்வாளர் (கிரேடு2) பதவியில் 1,429 காலி இடங்கள் நேரடி நியமன முறையில் நிரப்பப்பட உள்ளன. இதற்கு ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த பதவிக்கு ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரர் உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களுடன் பிளஸ் 2 முடித்து, அதோடு தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரால் வழங்கப்பட்ட 2 ஆண்டு கால பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் சான்றிதழ் அல்லது சுகாதார ஆய்வாளர் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழை ஒரு பாடமாக எடுத்து படித்திருக்க வேண்டியது அவசியம்.

பொதுப் பிரிவினர் உள்ளிட்ட அனைத்து வகுப்பினருக்கும் வயது வரம்பு கட்டுப்பாடு ஏதும் கிடையாது. கட்டாய தமிழ் மொழி தகுதித் தாள் தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டியது அவசியம். கரோனா கால கட்டத்தில் பணியாற்றியவர்களுக்கு, பணிக்காலத்துக்கு ஏற்ப 2 முதல் 5 சிறப்பு மதிப்பெண் வழங்கப்படும். எனவே, தகுதி உள்ள ஆண்கள் www.mrb.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக நவம்பர் 16ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். போட்டித் தேர்வு நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

## செல்லப் பிராணிகளுக்கு உரிமம் பெறாவிட்டால் ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்க மாநகராட்சி நடவடிக்கை

சென்னை, நவ.01-

சென்னை மாநகரில் வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப் பிராணிகளுக்கு மாநகராட்சியிடம் உரிமம் பெறாவிட்டால் ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கும் வகையில் நேற்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி மன்றக்கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன் முன்னிலையில் ரிப்பன் மாளிகையில் நேற்று நடைபெற்றது.



இதில் அதிமுக கவுன்சிலர் கே.பி.கே.சதீஷ் பேசும்போது, "நெம்மேலி குடிநீர் திட்டத்தை, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்தார்" என பேசினார். அப்போது திமுக கவுன்சிலர்கள், திமுக ஆட்சியில்தான் அடிக்கல் நாட்டப்பட்டது என்றனர். இதனால் அதிமுக, திமுக கவுன்சிலர்களிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதால், கே.பி.கே.சதீஷின் மைக் அணைக்கப்பட்டது.

இதைக் கண்டித்து அதிமுக கவுன்சிலர்கள் வெளிநடப்பு செய்தனர். தொடர்ந்து, சென்னை மாநகராட்சி பகுதிகளில் வளர்க்கப்படும் செல்லப் பிராணிகளான நாய்கள் மற்றும் பூனைகளுக்கு உரிமம் பெறுவதை கட்டாயமாக்கவும், நவ.24ம் தேதிமுதல் உரிமம் பெறாத செல்லப் பிராணிகளை, வீடு வீடாக ஆய்வு செய்து கண்டறியவும், செல்லப் பிராணிகளுக்கு உரிமம் பெறாத உரிமையாளர்களுக்கு ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கவும், பூங்காக்கள், நடைபாதைகள் மற்றும் பொதுமக்கள் கூடும் பிற பகுதிகள் உள்ளிட்ட பொது இடங்களில் நாய்களுக்கு கழுத்துப் பட்டை இன்றி அழைத்து வரும் உரிமையாளர்களுக்கு ரூ.500 அபராதம் விதிக்கவும், அபராதத்தை கோட்ட சுகாதார ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் மூலம் வசூலிக்க அனுமதி அளித்தும் மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னையில் ரூ.5.19 கோடியில் 2 லட்சம் நாய்களுக்கு மைக்ரோ சிப் பொருத்துதல், அந்த சிப்களில் உள்ள தரவுகளை எடுக்கும் 80 உபகரணங்களை வாங்குதல், அவற்றை மேலாண்மை செய்வதற்கான மென்பொருள் உருவாக்கி, 5 ஆண்டுகளுக்கு பயன்படுத்தி பராமரித்தல் ஆகியவற்றை மேற்கொள்ள தனியார் நிறுவனத்துக்கு பணி ஆணை வழங்கவும் கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டது.


மாநகராட்சியில் 29,455 தூய்மைப் பணியாளர்களுக்கு தினமும் 3 வேளை உணவு வழங்கும் பணியை, 3 ஆண்டுகளுக்கு ரூ.186.94 கோடியில் தனியார் நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மயிலாப்பூர் மந்தைவெளி பாக்கத்தில் உள்ள கிழக்கு வட்டச் சாலைக்கு 'சீர்காழி கோவிந்தராஜன் சாலை' என பெயரிடக் கோரியதற்கு மன்றத் தீர்மானம் நிறைவேற்ற அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதற்கு மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 72 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



# பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர்118 வது ஜெயந்தி விழா

கோவை, செப்.01-

கோவை ராமநாதபுரம் திருவள்ளூர் வீதியில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118 வது ஜெயந்தி விழாவும்68 வது குருபூஜை விழா மாமன்னர் மருது சகோதரர்களுடைய குரு பூஜை விழாவும் ஒரு சேர மிகவும் சிறப்பாக நடைபெற்றது அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதான வழங்கி சிறப்பான முறையிலே நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் ஏற்பாட்டாளர்களான அதே பகுதியை சேர்ந்த மாப்பிள்ளை சசி,தலைமையில் அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் மாநில குழு உறுப்பினர் எம் மோகன்ராஜ்,சதுரகிரி பாலமுருகன் மருது சேனை மாவட்ட செயலாளர் பாலகிருஷ்ணன் இந்து மகா சபா மாநில குழு அமைப்பாளர் பாக்சர் பிரேம் ஈஸ்வரன் சிட்டி மொபைல் சுரேஷ் அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் மாநில மாவட்ட நிர்வாகிகளும் தலைவர்களும் மற்றும் மருது சேனை மாநில மாவட்ட பொறுப்பாளர்களும் இந்து மகா சபா மாவட்ட பொறுப்பாளர்களும் விழாவில் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் எஸ் கே டெக்கரேஷன் நீ மாப்பிள்ளை சசி நன்றி உரை வழங்கினார்



■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில், இந்தியாவின் முன்னாள் பாரத பிரதமர் இரும்புப் பெண்மணி அன்னை இந்திரா காந்தி நினைவு நாளையொட்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. போடி காங்கிரஸ் தலைவர் கே. எம். எஸ். முஸாக் மந்திரி முன்னிலை, காங்கிரஸ் தொழிற்சங்கம் தேனி மாவட்ட தலைவர் ஜம்பு சுதாகர் முன்னாள் ,மாநில பொதுக்குழு உறுப்பினர் முகமது ரசூல் ,நகர பொதுச் செயலாளர். . அரசகுமார், நகர பொருளாளர் ஜின்சன், முன்னாள் மாநில இளைஞரணி செயலாளர். ஏ .பி.வினோத்குமார், நகர செயலாளர் ரவிச்சந்திரன், கனகராஜ், கணபதி, மாவட்ட பிரதிநிதி சந்திரசேகர் ,ராமைய மற்றும் போக்குவரத்து மண்டல தலைவர் எஸ். எஸ். மணிகண்டன் ,நகர நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




■ கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விவசாயிகள் குறைதீர்வுநாள் கூட்டம் இன்று (31.10.2025) நடைபெற்றது. உடன் வேளாண்மை இணை இயக்குநர் எம்.லட்சுமிகாந்தன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சொ.இளஞ்செல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) க.கதிரேசன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சொர்ணலட்சுமி உட்பட பலர் உள்ளனர்.

01.11.2025 அன்று மணலிக்கரை புனித மேரி கொரற்றி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில்

# நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நடைபெறவுள்ளது பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா வேண்டுகோள்

கன்னியாகுமரி, நவ.01-

தமிழ்நாட்டை நோயில்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாமினை தமிழ்நாடு முழுவதும் 02.08.2025 அன்று சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்கள்.

இம்முகாமில் சிறந்த மருத்துவர்களை வைத்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் கண்டிப்பாக தங்களது முழு உடலை பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு, அட்டை பெற்ற நபர்களுக்கு, இம்முகாமில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் முகாமில் ஆண்கள், பெண்கள், கர்ப்பிணிகள் (மகப்பேறு) என மூன்றாக பிரிக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிட்சை, எலும்பு முறிவு மருத்துவம், பேறுகால மருத்துவம், குழந்தை நல மருத்துவம், இதயநல சிறப்பு மருத்துவம், நரம்பியல் சிறப்பு மருத்துவம், நுரையீரல் சிறப்பு மருத்துவம், நீரிழிவு நோய்கான சிறப்பு மருத்துவம், தோல் சிறப்பு மருத்துவம், பல் மருத்துவம், கண் சிறப்பு மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், இயற்கை மருத்துவம், உணவியல் ஆலோசணை உள்ளிட்ட ஆகிய 17 சிறப்பு மருத்துவ சிகிட்சை, சிறப்பு மருத்துவ நிபுணர்களால் வழங்கப்பட உள்ளது. தொடர்ந்து முதல்வரின் விரிவான காப்பீடு திட்ட அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது.

அதனடிப்படையில் வரும் (சனிக்கிழமை) 01.11.2025 குமாரபுரம், கோதநல்லூர், விலவூர், வேர்கிளம்பி, திருவிதாங்கோடு ஆகிய பேரூராட்சிகள் மற்றும் கல்குறிச்சி, ஆத்திவிளை, கண்ணனூர் உள்ளிட்ட ஊராட்சிகளுக்குட்பட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மணலிக்கரை புனித மேரி கொரற்றி மேல்நிலைப்பள்ளி வளா கத்தில் நடைபெறவு ள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதிக்கு அருகாமையில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் நலம் காக்கும் ஸ்டாலின் ஞீ முழு உடல் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



■ திருப்பூர் மாவட்டம்துபாயில் மேயர்கள் மாநாடு இதில் கலந்துகொண்ட திருப்பூர் மேயர் தினேஷ். துபாய் நகரில் எக்ஸ்போசிட்டி அக்டோபர் 27 முதல் நவம்பர் இரண்டு வரை நடைபெற உள்ளது. ஆசியா பசிபிக் 164. நாடுகளின் மேயர்கள் கலந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளது. தமிழ்நாட்டின் சார்பாக மேயர் தினேஷ்குமார் சர்வதேச மேயர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப்பினை தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் பரிந்துரை செய்து அனுப்பி வைத்தார். இந்த வாய்ப்பினை கொடுத்த தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களையும் துணை முதல்வர் உதயநிதி மற்றும் அமைச்சர் நேரு ஆகியோரை இந்த வாய்ப்பினை கொடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக நேரில் சென்று. பூச்செண்டு கொடுத்து. ஆசி பெற்று வந்தார்.



# சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், முன்னாள் ராணுவ வீரர் தூக்கிட்டு தற்கொலை

சிவகங்கை, நவ.01-

சிவகங்கை நகர் மஸ்ஜித் ரோட்டில் வசிப்பவர் முத்து முனியாண்டி வயது 65. முன்னாள் ராணுவ வீரர் ஆன இவர் சிவகங்கை அருங்காட்சியத்திலும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவருக்கு கடந்து சில மாதங்களுக்கு முன்னர் இதயத்தில் ஆஞ்சியோ சிகிச்சை மேற்க் கொள்ளப்பட்டது. மேலும் குடும்ப பிரச்சினை காரணமாக கடந்த சில மாதங்களாக அவதியுற்று வந்ததாக கூறப்படுகிறது. நேற்று இரவு அவர் வீட்டுக்கு வராத நிலையில், சிவகங்கை ஆட்சியர் அலுவலக வளாகப் பகுதியில் உள்ள மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். நேற்று முன்தினம் காலை அப்பகுதியில் நடைபயிற்சி மேற்கொள்ள சென்றவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் சிவகங்கை நகர் காவல் நிலைய காவல்துறையினர் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து உயிரிழப்பு குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




■ திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அசோக் லேலண்ட் மற்றும் அம்மன் ஆட்டோ நிறுவனத்தின் புதிய கிளை திறப்பு விழா சிறப்பாக இன்று நடைபெற்றது அம்மன் ஆட்டோ நிறுவனத்தின் CEO “சங்கர்” சார் அவர்களின் ஆணைக்கிணங்க மகாராணி கல்லூரிக்கு எதிர்ப்புறம் புதிய பைபாஸ் சாலையில் புதிய கிளை துவக்கப்பட்டுள்ளது மேலும் திறப்பு விழாவிற்கு வருகை தந்த சுந்தரம் பைனான்ஸ் மேனேஜர் முரளி மற்றும் சோழமண்டலம் கிளை மேலாளர் சதீஷ்குமார் அம்மன் ஆட்டோ நிறுவனத்தின் ஹெச் ஆர் ரியாஸ்கான், செந்தில் குமார் (மேனேஜர்) மற்றும் கிளை மேலாளர்கள் பெரோஸ் மற்றும் ஜான் அலெக்சாண்டர் மற்றும் பலர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்


## மாவட்ட செய்தியாளர்கள் புகைப்படக் கலைஞர்கள் தாலுகா செய்தியாளர்கள் தேவை

கடந்த 5 ஆண்டுகளாக தமிழகமெங்கும் வெளிவந்து கொண்டிருக்கும்

**மாலை தந்தி நாளிதழுக்கு**

திண்டுக்கல் தூத்துக்குடி , திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை, தர்மபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களுக்கு அனுபவம் உள்ள ஆண் செய்தியாளர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்புக்கு :

இணை ஆசிரியர் கரு சந்துரு

9585 32 31 32

அலுவலக மேலாளர் சு. அழகர்சாமி

94435 71719


# தாம்பரம் மாநகராட்சிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாய், பன்றி, மாடு, பொம்மைகளுடன் கொசு வலையை போர்த்திக் கொண்டு வந்த அதிமுக வார்டு உறுப்பினர்கள்

மாமன்ற கூட்டத்தில் அதிமுக உறுப்பினர்களுக்கும் திமுக மேயருக்கும் இடையே கடும் வாக்குவாதம்



தாம்பரம், நவ.01-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொசு, நாய், மாடு, உள்ளிட்ட தொல்லைகளால் மக்கள் அவதிப்பட்டு வருவதாகவும் அதை கட்டுப்படுத்த மாநகராட்சி பணியாளர்கள் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை பலமுறை கோரிக்கை விடுத்தும் இந்த நிலை தான் நீடிக்கிறது என தெரிவித்து.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாமன்ற சாதாரண கூட்டத்திற்கு வந்த அதிமுக மாமன்ற உறுப்பினர்கள் நாய் மாடு பொம்மைகளுடன் கொசு வலையை போர்த்திக் கொண்டு மாமன்ற கூட்டத்தில் பங்கேற்றனர்..

தாம்பரம் மாநகராட்சி அலுவலகம் அருகே இருந்து ஊர்வலமாக வந்த மாமன்ற உறுப்பினர்கள் கருப்பு சட்டை அணிந்தவாறு மாநகராட்சிக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்..

அதனைத் தொடர்ந்து கூட்ட அரங்கிற்குள் சென்ற வார்டு உறுப்பினர்கள் தாம்பரம் மாநகராட்சி மேயரிடம் மாநகராட்சியின் பணிகள் குறித்து வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்



# தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது

தென்காசி, நவ.01-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்டத்தில் 2025 2026 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் ஒத்திசைவு சாகுபடி செய்யப்பட்ட நெல் 8836 ஹெக்டர், சிறுதானியங்கள் 4484 ஹெக்டர், பயறு வகைகள் 530 ஹெக்டேர் பருத்தி 602, கரும்பு 882 ஹெக்டர், எண்ணெய் வித்து 1044 ஹெக்டேர், பழங்கள் 10320 ஹெக்டேர், காய்கறிகள் 2817 ஹெக்டேர், வாசனைப் பயிர்கள் 655 ஹெக்டேர், மலைப்பயிர்கள் 14337 ஹெக்டேர், பூக்கள் 489 ஹெக்டேர் பரப்பும் ஒத்திசைவு செய்யப்பட்டது. மழையளவு, நீர் இருப்பு விபரம் மற்றும் இடுபொருட்கள் இருப்பு விபரம் அனைத்து விவசாயிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது.

செங்கோட்டை, கடையம், தென்காசி மற்றும் கடையநல்லூர் வட்டாரங்களில் கார் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள இடங்களில் விவசாயிகள் பயன்பெற வேண்டி 22 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலம் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்ற விபரம் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

தென்காசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் மூலம் தேசிய ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத் திட்டத்தின் கீழ் இரண்டு பயனாளிகளுக்கு ரூ. 78,571/ மதிப்பிலான பவர் வீடர்களை மானியத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வழங்கினார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட பெறப்பட்ட 180 மனுக்களுக்கு 10 நாட்களுக்குள் விரிவான மற்றும் விவசாயிகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய பதிலை வழங்குமாறு அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் திரு.ரா. ராஜ்மோகன், இ.வ.ப., வேளாண்மை இணை இயக்குநர் செ.அமலா, வேளாண்மை துணை இயக்குநர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி. ச. கனகம்மாள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.இரா. தண்டாயுதபாணி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.கு.நரசிம்மன், முதுநிலை மண்டல மேலாளர், (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்) திருமதி. இரா.வெங்கடலட்சுமி, தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி. ஜெசிமா பானு மற்றும் அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள், அனைத்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், அனைத்து துறை அலுவலர்கள், அனைத்து விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாய பெருமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.







# போடி உட்கோட்ட காவல்துறையினர் சார்பாக விழிப்புணர்வு ஊர்வலம்

தேனி, நவ.01-

தேனி மாவட்டம் போடி உட்கோட்ட காவல்துறையினர் சார்பாக போதை பொருள் ஒழிப்பு மற்றும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு,பெண்கள் பாதுகாப்பு, வலைதள குற்றத்தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் புக்யா சினேகா பிரியா தலைமையில் நடைபெற்றது.நகராட்சி அலுவலகம் அருகே தொடங்கிய இந்த ஊர்வலத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பச்சை கொடி அசைத்து ஊர்வலத்தை தொடங்கி வைத்தார் இந்த ஊர்வலமானது போடி நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று பொதுமக்களுக்கு பள்ளி மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பதாதைகள் ஏந்தியும் கோஷங்கள் எழுப்பியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த விழிப்புணர் ஊர்வலத்தில் டிஎஸ்பி தேவராஜ், போடி நகர் காவல் நிலைய ஆய்வாளர் கோபிநாத், போடிய அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மீனாட்சி, சின்னமனூர் காவல் ஆய்வாளர் பாலாண்டி, தேவாரம் காவல் ஆய்வாளர் அய்யம்மாள் ஜோதி, மற்றும் காவல் சார்பு ஆய்வாளர்கள் காவல் துறையினர் பலர் கலந்து கொண்டனர்.

# இந்த ஆண்டு தித்திக்கும் ஆனந்த தீபாவளி விழா கொண்டாட்டம் சாரதி நினைவு முதியோர் காப்பகத்தில் சிறப்பாக நடைபெற்றது

வரதராஜபுரம், நவ.01-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அருகே உள்ளே வரதராஜபுரம் பகுதியில் அமைந்துள்ள சாரதி நினைவு அறக்கட்டளை இந்த ஆண்டு தீபாவளி திருநாள் மிகுந்த மகிழ்ச்சியுடன் மூத்த பெரியவர்களுடன் கொண்டாடப்பட்டது

விழா அறக்கட்டளையின் நிறுவனர் என் பால்ராஜ் அவர்களின் தலைமையில் அறிவித்தலின் பேரில் நம் பள்ளி நம் வீடு அமைப்பினரால் காலை 10 மணி முதல் 12.30 மணி வரை சிறப்பாக எளிமையாக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது

விழா தொடக்கத்தில் சாரதி காப்பகத்தின் நிறுவனர் என்.பால்ராஜ் மற்றும் நம் பள்ளி நம் வீடு வாகை மகளிர் குழு ஆகிய அமைப்பினர்கள் இணைந்து குத்து விளக்கு ஏற்றி விழாவினை



சிறப்பித்தனர்

அதன் பின் வரதராஜபுரம் ராயப்பன் நகரில் செயல்படும் வாகை மகளிர் குழு உறுப்பினர்கள் சிவரஞ்சனி விஜயாம்பிகா சகுந்தலா தேவி மற்றும் நகர வாழ்வு மகளிர் குழுவினர் பாரத நாட்டியம் செல்வி நந்திதா மற்றும் கர்நாடக இசை செல்வி நித்யஸ்ரீ ஆகியவர்களுடன் பல்வேறு நிகழ்ச்சிகளால் அனைவரையும் மகிழ்ச்சி அடைந்தனர்

பின்னர் நம் பள்ளி நம் வீடு மற்றும் அனைத்து வாகை மகளிர் குழு மற்றும் சாரதி நிர்வாகிகள் இணைந்து விளையாட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டது முதியோர் இல்லவாசிகள் அனைவருக்கும் ஆர்வமுடன் தங்கள் வயது ஒரு தடையாக நினைக்காமல் கலந்து பங்கேற்றார்கள் இதில் சிரிப்பு மகிழ்ச்சி மற்றும் அன்பு நிரம்பிய சுழலில் தீபாவளி நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது

தீபாவளி விழா நடுவில் இனிப்புகள் மற்றும் மிக்சர் போன்ற சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு மேலும் தீபாவளி சிறப்பு மதிய உணவு அனைவருக்கும் நம் பள்ளி நம் வீடு சார்பில் சாரதி நிறுவனர் தலைமையில் வழங்கப்பட்டன

நாள் முழுவதும் சிரிப்பு மகிழ்ச்சியும் நிரம்பிய நிலையில் விழா நடைபெற்றது விழாவை வெற்றிகரமாக நடந்த உதவிய நம் பள்ளி நம் வீடு குழு ராயப்பன் நகர் வாகை மகளிர் குழு ஆகிய அனைத்து நலத்திட்ட உறுப்பினர்களுக்கும் சாரதி நினைவு அறக்கட்டளையின் சார்பில் மரியாதை உடன் சால்வை அணிவித்து இதய பூர்வமான நன்றிகள் தெரிவிக்கப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் சாரதி நினைவு அறக்கட்டளை நிறுவனர் என்.பால்ராஜ் உறுப்பினர்கள் ஜாய் செல்வி, தேவராஜ், நம் பள்ளி நம் வீடு தலைவர் அல்லா பஷீர், அப்துல் ரஹீமான், பரிமளா பிரியா, வாகை மகளிர் குழு நிர்வாகிகள் சிவரஞ்சனி, விஜயாம்பிகா, சகுந்தலா தேவி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

## காரைக்குடியில் இன்று (நவ01) மின்தடை

சிவகங்கை, நவ.01-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி துணைமின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் இன்று (நவம்பர் 1) சனிக்கிழமை அன்று காரைக்குடி உட்கோட்டத்திற்கு உட்பட்ட காரைக்குடி கழனிவாசல்,பாண்டியன் நகர், VAO காலனி, NGO காலனி,செக்காலை ரோடு,சுப்பிரமணியபுரம்,வாட்டர்டேங்க்,செஞ்சை,சூடாமணிபுரம்,முத்துப்பட்டினம்,காட்டுத்தலைவாசல்,வைரவபுரம் ,பர்மாகாலணி ஆகிய பகுதிகளுக்கு காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை மின் விநியோகம் இருக்காது என காரைக்குடி மின் வாரிய செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

# மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார்

கடலூர், நவ,01-

கடலூர், நகர அரங்கம் (டவுன் ஹால்) அருகே, மழைநீர் சேகரிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்ற பேரணி மற்றும் மின்னணு பிரச்சார வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார்.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவிக்கையில்,

மழைநீர் சேகரிப்பு மற்றும் அதன் கட்டமைப்பு பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறையின் அதிநவீன மின்னனு வீடியோ வாகனத்தின் மூலம் விழிப்புணர்வு காணொலி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை மீண்டும் தமிழகமெங்கும் செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மழைநீர் சேகரிப்பு மற்றும் அதன் கட்டமைப்பு பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறையின் அதிநவீன மின்னனு வீடியோ வாகனத்தின் மூலம் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இந்த வாகனத்தின் மூலம் 31.10.2025 முதல் 04.11.2025 முடிய 5 நாட்களுக்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டத்தை மக்களிடையே கொண்டு செல்லும் வகையில் ஒளிப்பரப்பு செய்யப்படுகிறது. இதனால் மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தைப் ற்றி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தபடுகிறது. மேலும், மழைநீரை சேகரிப்பதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயருவதுடன் மக்களின் வாழ்வாதாரமும் மேம்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப. தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பா ர்வை பொறியாளர் வி.செந்தில்குமரன், நிருவாகப் பொறியாளர்கள் கா.மாரியப்பா, வினோத்ராஜா, ஜி.தமிழ்செல்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தமிழ்நாடு நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம்

மதுரை, நவ.01-

தமிழ்நாடு அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இவற்றில் மகளிர் உரிமை தொகை திட்டம், விடியல் பயணம் திட்டம், புதுமைப் பெண் திட்டம் என பெண்களுக்கு என்று சிறப்பாக கொண்டுவரப்பட்டுள்ள திட்டங்கள் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண்கள் பயனடையும் விதமாக தமிழக அரசு நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம் என்ற மகத்தான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

தமிழக அரசு நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம் (Tamil Nadu Land Purchase Scheme) என்பது சொந்த நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண்களுக்கு சொந்த நிலம் வாங்குவதற்காக தமிழ்நாடு அரசு ரூ.5 இலட்சம் மானியம் வழங்கும் திட்டமாகும். பெண்கள் விவசாய நிலம் வாங்குவதற்காக நிலத்தின் சந்தை மதிப்பில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் மானியம் வழங்கும் திட்டமாகும். சொந்த விவசாய நிலம் வாங்க மானியம் வழங்கி, விவசாய தொழில் செய்யும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிரை நில உடைமையாளர்களாக உயர்த்தி, அவர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துவதே நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் சொந்தமாக விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பில் 50% அல்லது அதிகபட்சம் ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

நிலம் வாங்குவதற்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் குறைந்த வட்டியில் கடன் வசதியும் செய்துக் கொடுக்கப்படுகிறது. இதன் மூலமாக, ஒவ்வொரு பயனாளியும் அதிகபட்சமாக இரண்டரை ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது ஐந்து ஏக்கர் புஞ்சை நிலம் வாங்கிக் கொள்ளலாம். இந்த திட்டம் மூலம் வாங்கப்படும் நிலங்களுக்கு 100 சதவீத முத்திரை தாள் மற்றும் பதிவு கட்டணத்தில் இருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதாவது, பத்திரப்பதிவு முழுவதும் இலவசம். இந்த திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலத்தினை விண்ணப்பதாரர் 10 ஆண்டுகளுக்கு இன்னொருவருக்கு விற்பனை செய்யக்கூடாது. மேலும், வாங்கப்படும் நிலம் SC/ST பிரிவைச் சேராத நில உரிமையாளர்களிடமிருந்து வாங்கப்பட வேண்டும். வாங்கப்பட்ட நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டில் 11 பயனாளிகள் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.55 இலட்சம் மானியம் பெற்று பயனடைந்துள்ளனர். 202526 ஆம் ஆண்டில் 7 பயனாளிகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.35 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளி சாந்தி தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் சாந்தி, விவசாயம் செய்ய வேண்டும் என்பது என்னுடைய நீண்ட நாள் விருப்பமாக இருந்தது. எங்கள் குடும்பத்திற்கு சொந்தமாக நிலம் இல்லாத சூழ்நிலையில் தாட்கோவில் நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டத்தை பற்றி தெரிந்து கொண்டேன். அந்த திட்டத்தின் கீழ் நான் ரூ.5 இலட்சம் மானியம் கொடுத்தார்கள். சோழவந்தான் தென்கரைப்பகுதியில் நிலம் வாங்கினேன். நிலம் வாங்கியவுடன் பத்திரப்பதிவுக்கு எந்த கட்டணமும் அரசு வாங்கவில்லை. முற்றிலும் இலவசமாக பத்திரப்பதிவு செய்து கொடுத்தார்கள். தற்போது என்னுடைய பெயரில் 1.5 ஏக்கர் நிலம் உள்ளது. இத்தகைய பெருமையையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்திய தமிழ்நாடு அரசுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை அணுகி அவர்கள் வழிகாட்டுதலின்படி அந்தப்பகுதி அதிக நீர்ப்பாசனப்பகுதி என்பதால் நான் என்னுடைய நிலத்தில் வாழை பயிரிட்டு இயற்கை முறையில் விவசாயம் செய்து வருகிறேன். தற்பொழுது வாரம் ரூ.5,000 வீதம் மாதம் ரூ.20,000 சம்பாதிக்கிறேன். என்னுடைய சொந்த நிலத்தில் நான் விவசாயம் பார்ப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நான் என்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் இந்த திட்டத்தில் பயன்பெற என்னால் முடிந்த ஆலோசனைகள் கூறி உதவி வருகிறேன். வேளாண் விற்பனை வணிகத்துறை அலுவலர்கள் உதவியுடன் வாழை மதிப்பு கூட்டுதலுக்கு தற்போது ஆலோசனை பெற்று வருகிறேன். இத்தகைய உன்னதமான திட்டத்தை அறிமுகப்படுத்தி எங்களின் வாழ்வாதாரத்தை உயரச்செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை, நவ.01-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதன்படி, விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தேவையான அனைத்து வசதிகளுடன் மேற்கொள்ளும் பொருட்டும், பிரதி மாதந்தோறும் விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறு, நடைபெற்று வரும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள



நடவடிக்கைகள் குறித்தும், புதிய கோரிக்கைகள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், கண்மாய்க்கு செல்லும் ஊரணிகளை வெட்டு மராமத்து செய்திடவும், தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திடவும், கண்மாய்களை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளவும், கண்மாய் பகுதிகளில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரங்களை அகற்றிடவும், இலவச மின் இணைப்புகள் வழங்கிடவும், கண்மாய் ஆக்கிரமிப்புக்களை அகற்றிடவும், விவசாய பணிகளுக்கென இயந்திரங்கள் வழங்கிடவும்,

வரத்துக்கால்வாய்களை சீரமைத்திடவும், எதிர்வரும் நிதியாண்டில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டம் அல்லது நபார்டு திட்டத்தின் கீழ் தார் சாலை வசதி அமைத்திடவும், விவசாய நிலங்களை வன விலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகா த்திடவும், ஆழ்துளை கிணறுகள் அமைத்திடவும், அரசு மானியத்தில் சோலார் பம்ப்செட் அமைத்திடவும், தேவையான சான்றிதழ்களை வழங்கிடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திடவும், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திடவும் மற்றும் விவசாயிகள் அரசின் திட்டங்களின் பயன்களை முழுமையாக பெற்றிடவும் துறை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வங்கிகளின் மூலம் கடனுதவிகள் வழங்கி வேளாண் சார்ந்த புதிய தொழில் தொடங்கிட உறுதுணையாக இருந்திடவும், விவசாயிகளுக்கான பயிர் காப்பீடு தொகை வழங்கிடவும், தேவையான உரங்களை இருப்பு வைத்திடவும், கடனுதவிக்குரிய மானியத் தொகையினை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், மின் விநியோகங்களை சீரான முறையில் வழங்கிடவும், விவசாயிகளுக்கான தனி அடையாள எண் வழங்கிடவும், குறிப்பாக இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்தார்.

மேலும், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர். பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) திரு.இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு.சு.சுந்தரமகாலிங்கம், மேலாண்மை இயக்குநர் (மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி) திருமதி உமா மகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி தனலெட்சமி உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ரூ.18,238 கோடிக்கு திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதி: இந்திய அளவில் தொடர்ந்து முதலிடம்

திருப்பூர், நவ.02-

கடந்த நிதியாண்டான 2024-25ம் ஆண்டில் இந்தியாவின் பின்னலாடை ஏற்றுமதி ரூ.65 ஆயிரத்து 178 கோடிக்கு நடந்தது. இதில் திருப்பூரில் இருந்து ரூ.39 ஆயிரத்து 618 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. இது இந்தியா அளவில் திருப்பூரின் பங்களிப்பு 61 சதவீதம் ஆகும். 2023-24ம் ஆண்டில் இந்தியாவின் ஏற்றுமதி ரூ.55 ஆயிரத்து 798 கோடிக்கு நடந்தது. இதில் திருப்பூரின் பங்களிப்பு ரூ.33 ஆயிரத்து 45 கோடியாகும். நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை என கடந்த 5 மாதங்களில் இந்தியாவின் ஏற்றுமதி ரூ.29 ஆயிரத்து 899 கோடியாகும்.இதில் திருப்பூரின் பங்களிப்பு ரூ.18 ஆயிரத்து 238 கோடியாகும்.

ஏப்ரல் மாதம் ரூ.3 ஆயிரத்து 260 கோடியும், மே மாதம் ரூ.3 ஆயிரத்து 924 கோடியும், ஜூன் மாதம் ரூ.3 ஆயிரத்து 622 கோடியும், ஜூலை மாதம் ரூ.3 ஆயிரத்து 834 கோடியும், ஆகஸ்ட் மாதம் ரூ.3 ஆயிரத்து 598 கோடிக்கும் ஏற்றுமதி நடந்துள்ளது. இது குறித்து திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் கூறுகையில், ''நாட்டின் மொத்த பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் 61 சதவீத பங்களிப்பை வழங்கி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது'' என்றனர்.

மாலை தந்தி

சனிக்கிழமை 1.11.2025

# வேலூர் மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என திமுக அலுவலகத்தில் அவசர செயற்குழு கூட்டம்: மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்





வேலூர், நவ.01-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தோட்டப் பாளையம், வேலூர் மத்திய மாவட்ட திமுக அலுவலகத்தில், தி.மு.க அவசர செயற்குழு கூட்டம் வேலூர் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மாவட்ட தி.மு.க செய லாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந் தகுமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கரூரில் த.வெ.க. கட்சி பிரசார கூட்டத்தில் 41 பேர் பலியானார்கள். அவர்களின் மறைவிற்கும், தி.மு.க தலைமை கழக தேர்தல் பணி குழு செயலாளர் சுப்பிரமணி மறைவிற்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பது குறித்தும், வேலூர் மாவட்டத்திற்கு வருகின்ற 4ந்தேதி தமிழ்நாடு துணை முதலமைச்சரும், திமுக இளைஞர் அணி மாநில செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் வருகையையொட்டி,

அன்று அரசு நிகழ்ச்சிகள் மற்றும் வேலூர் மாவட்ட திமுக சார்பில் நடைபெறும் கட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க வருகை தரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வேலூர் மாவட்ட தி.மு.க சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து வாக்காளர் சிறப்பு சுருக்க திருத்த திட்டத்தை நடைமுறைப்படுத்த பாஜக அரசு திட்டமிட்டுள்ளது அவர்களின் உள்நோக்கத்தை தகர்த்தெறிந்து உண்மையான தகுதி வாய்ந்த வாக்காளர் இடம்பெறச் செய்ய நிர்வாகிகள் தீவிரமாக செயலாற்ற வேண்டும் என நிர்வாகிகளிடம் வேண்டுகோள் விடுத்து நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் நடத்தினர்.

இக்கூட்டத்தில் வேலூர் மாநகர திமுக செயலாளரும், வேலூர் எம்.எல்.ஏ. வுமான ப.கார்த்திகேயன், குடியாத்தம் எம்.எல்.ஏ. அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில்குமார், ஒன்றிய செயலாளர்கள் தணிகாசலம், ஞானசேகரன், கஜேந்திரன், பகுதி செயலாளர்கள் வன்னியராஜா, பரமசிவம், பொதுக்குழு உறுப்பினர் லோகநாதன், கே வி குப்பம் ஒன்றிய திமுக பொருளாளர் சிட்டிபாபு, அணைக்கட்டு ஒன்றிய குழு துணை தலைவர் சித்ரா குமாரபாண்டியன், ஏரிப்புதூர் வெங்கடேசன், ஊணை ராமச்சந்திரன் அணைக்கட்டு அஸ்லாம் பாஷா மற்றும் மாநில செயற்குழு மற்றும் பொது குழு நிர்வாகிகள், மாநில மாவட்ட பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தமிழ்நாடு அறிவியல் இயக்க மாணவர் சந்திப்பு



தேவகோட்டை, நவ.01-

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் செயல்பாடுகளை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கிலும், அறிவியல் மனப்பான்மையை அவர்கள் வளர்த்துக் கொள்ளும் எண்ணத்திலும் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஒன்றியம் கண்ணங்குடி ஒன்றியத்தில் உள்ள சில பள்ளிகளில் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கண்ணங்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் இறைவழிபாட்டுக் கூட்டத்திலும், சடையமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அனுமந்தகுடி அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் சிறுவனூர் அரசு உயர்நிலைப்பள்ளியிலும் இந்த சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் பாக்கியம், இந்திரா, கிருபா மற்றும் மூர்த்தி இந்நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கினர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட பொருளாளர் பிரபு அறிவியல் பாடலை பாடியதுடன், இந்தியாவில் அறிவியல் பிரச்சார இயக்கங்களின் வளர்ச்சி, நாடு முழுவதும் செயல்பட்டு வரும் அறிவியல் இயக்கங்களின் பணி, தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் தோற்றம் மற்றும் அது மேற்கொண்டு வரும் சமுதாயம் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தேசிய மற்றும் உலக தினங்கள், கருத்தரங்கங்கள், மற்றும் மாணவர்களுக்காக நடத்தப்பட்டு வரும் குழந்தைகள் அறிவியல் மாநாடு, துளிர் திறனறிதல் தேர்வு மற்றும் துளிர் வினாடி வினா போன்றவற்றைப் பற்றியும், அறிவியல் வெளியீடுகள், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தில் உறுப்பினர்களாக இணைவது பற்றியும் எடுத்துக் கூறினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க கண்ணங்குடி கிளைச் செயலாளர் குருமூர்த்தி இந்த சந்திப்பை ஒருங்கிணைத்தார். மேலும் விவரங்களுக்கு 9944089151 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம்.





# கீழக்கோட்டை அரசு பள்ளியில் வானவில் மன்ற எளிய அறிவியல் கணித பரிசோதனைகள்

காளையார் கோவில், நவ.01-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் வானவில் மன்ற அறிவியல் கணித செயல்பாடுகள் நடைபெற்றது. தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்றார். அறிவியல் மற்றும் கணித செயல்பாடுகளை வானவில் மன்ற ஸ்டெம் கருத்தாளர் ஜெயபிரியா செய்து காண்பித்து மாணவ மாணவிகளையும் செய்து பார்க்க ஊக்குவித்தார். வெப்ப உமிழ்வினை வெப்ப கொள்வினை

பெர்னூலியின் தத்துவம் நீரின் விசை தாவர உலகம் முழுக்கள் இயல் எண்கள் குறித்த அறிவியல் மற்றும் கணித செயல்பாடுகள் செய்வதில் மாணவ மாணவிகள் பயிற்சி பெற்றனர். மாணவ மாணவிகள் ஆர்வமுடன் வகுப்பறையில் செய்த செயல்பாடுகளை தானே செய்துபார்த்து மகிழ்ந்தனர். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியைகள் வாசுகி கமலம்பாய் கணினி பயிற்றுநர் வித்யா மற்றும் கஸ்தூரி கலந்து கொண்டனர்.





# கோவையில் இந்தோ ஏஜடி கூட்டு மாநாடு

கோவை, நவ.01-

இந்தோ ஏஜடிகூட்டு மாநாடு கோவையில் ரேஸ் கோர்ஸ் தனியார் கூட்டரங்கில் நடைபெற்றது மாநாட்டின் முதன்மை விருந்தி னராக டி ஐ டிசிஓ நிர்வாக இயக்குனர் ஸ்வேதா சுமன் ஐஏஎஸ் பங்கே ற்றார் ஆசிய தொழில்நுட்ப நிறுவனம்ஏ ஐடிஅவர்களின் கல்வி குழுமம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் டிஐடிசிஓ இணைந்து நடத்தியது மாநாட்டில் தாய்லாந்தில் உள்ள ஏஜடி நிறு வனத்தில் வழங்கப்படும் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மேற்படிப்புகள் பற்றிய விழிப்புணர்வை தமிழ்நாட்டு மாணவர்களுக்கு வழங்கும் நோக்க த்துடன் நடத்தப்பட்டது ஏஜடி நிறுவனம் லாப நோக்க மற்ற சர்வதேச கல்வி நிறுவனம் ஆகும் பொறியியல் தொழில்நுட்பம் சுற்றுச்சூழல் நிலையான பயிற்சி மேலாண்மை என்ற பெயர்களை முதுகலை முனைவர் பட்டம் படிப்புகள் வழங்கப்படுகிறது. இதில் 90 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 1000 மாணவர்கள் 25 நாடுகளில் இருந்து பேராசிரியராக பணியாற்றுகின்றனர் இந்தியாவின் வட மாநிலங்களில் இருந்து மாணவர்கள் அதிகம் சேர்கிறார்கள் ஆனால் தமிழ்நாட்டில் இருந்து குறைவாகவே சேர்க்கை உள்ளதால் இதனை மாற்றும் நிகழ்ச்சியாக விழிப்புணர்வு நிகழ்வாக நடத்தப்பட்டது

# கொடைக்கானலில் சாலை வசதியின்றி அவதிப்பட்டு வரும் கிராம மக்கள்





திண்டுக்கல், நவ.01-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வில்பட்டி ஊராட்சி பகுதியில் அமைந்திருக்கும் வெள்ளப்பாறை கிராமம் இந்த கிராமத்தில் சுமார் 80 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்திற்கு அடிப்படைத் தேவையான சாலை வசதி செய்து தர கோரி தமிழக அரசுக்கு தொடர்ந்து 15 ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வரும் நிலையில் இந்த கிராமத்தில் வசிக்கும் பள்ளி குழந்தைகள் பள்ளிக்கு செல்வதற்கு, அரசு வழங்கும் ரேஷன் பொருட்கள் வாங்குவதற்கு உள்ளிட்ட முக்கிய தேவைகளுக்கு பேத்துப்பாறை என்ற கிராமத்திற்கு தான் செல்ல வேண்டும் இந்த பகுதி மக்கள் தங்கள் அத்தியவசிய தேவைகளுக்கு பேத்துப்பாறை என்ற கிராமத்திற்கு நடந்து சென்று வரும் நடைபாதை என்பது மிகவும் மோசமான செங்குத்தான பாறை வழியாக ஆபத்தான முறையில் சென்று வருகின்றனர். குறிப்பாக மழைக்காலங்களில் செங்குத்தான பாறை வழியாக செல்வது மிகவும் கடினமான ஒன்றாக உள்ளது இதுகுறித்து அப்பகுதி கிராம மக்கள் பழனி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அதிகாரிகளுக்கு பலமுறை தங்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு பேத்துப்பாறை கிராமத்திற்கு சென்று வருவதற்கு சிமெண்ட் படிக்கட்டுகள் போன்ற நடைபாதையாவது அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை மற்றும் புகார் அளித்து வரும் நிலையில் சம்பத்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் அப்பகுதி பொதுமக்கள் பள்ளி குழந்தைகள் மற்றும் முதியோர்கள் மீது சிறிதும் அக்கறை கொள்ளாமல் தொடர்ந்து அலட்சியம் காட்டி வருவதாக அப்பகுதி கிராம மக்கள் குற்றம் சாட்டுவதோடு வருத்தம் தெரிவிக்கின்றனர் இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் மற்றும் சம்பத்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து கிராமமக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு பேத்துப்பாறை கிராமத்திற்கு பாதுகாப்பாக நடந்து சென்றுவருவதற்கு நடவடிக்கை வேண்டும் என்று கோரிக்கை வைப்பதோடு .மேலும் விரைந்து நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் சாலை மறியல் போன்ற போராட்டங்களில் ஈடுபட போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர் .







■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கடந்த மாதம் 27ஆம் தேதி கொம்பகரனேந்தல், வீரநாராயண தேவன் பட்டி ஆகிய கிராமங்களில் மருது சகோதரர்கள் குருபூஜை மற்றும் முத்துராமலிங்க தேவர் குரு பூஜையில் சிலம்பம் நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் மானாமதுரையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 118 ஆவது ஜெயந்தி மற்றும் 63 ஆம் ஆண்டு குருபூஜையை முன்னிட்டு தேவர் சிலை முன்பு அக்டோபர் 30 ஆம் தேதி சீனி ஆசான் சிலம்பம் மற்றும் ஆயுத கலை பயிற்சி பள்ளி சார்பாக சிலம்ப நிகழ்ச்சி நடந்ததுஞ் இதை ஆயிரக்கணக்கானோர் கண்டுகளித்தனர்ஞ்அங்கு கூடி இருந்த பொதுமக்களும் காவல் துறை மற்றும் பத்திரிக்கை நண்பர்களும் ,பொதுமக்கள், மாணவ மாணவிகளை வெகுவாக பாராட்டினர்..







# மதுரை திருமங்கலத்தில் தேவர் சிலைக்கு பாலாபிஷேகம், முளைப்பாரி எடுத்து பொங்கலிட்டு தேவர் ஜெயந்தி விழா

மதுரை, நவ.01-

மதுரை திருமங்கலத்தில் தேவர் சிலைக்கு பாலாபிஷேகம், முளைப்பாரி எடுத்து பொங்கலிட்டு தேவர் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 118வது ஜெயந்தி மற்றும் 63 ம் ஆண்டு குருபூஜையை முன்னிட்டு மதுரை மாவட்டம் திரும ங்கலத்தில் அரசு விருந்தினர் மாளிகைக்கு அருகில் அமைந்துள்ள தேசியமும், தெய்வீகமும் எனது இரு கண்கள் என்றுரைத்த முத்துராமலிங்க தேவர் திருவுருவ சிலைக்கு அக்டோபர் 30 ஆம் தேதி மூவேந்தர் முன்னேற்ற கழகம் சார்பில் புறநகர் மாவட்ட கழக செயலாளர் குட்டி என்ற எஸ்.ஞானசீலன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

அத்துடன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு பாலாபிஷேகம் செய்து பெண்களால் முளைப்பாரி எடுக்கப்பட்டு பொங்கல் வைத்து.பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மூவேந்தர் முன்னேற்ற கழகத்தின் மூத்த நிர்வாகிகள் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



■ மதுரை மாவட்டம், சாலையில் கிடந்த ரூபாய் 17 லட்சம் பணத்தை மீட்டு காவல் நிலையத்தில் ஒப்படைத்த சிம்மக்கல் பகுதியில் வசித்து வரும் திருமதி.செல்வமாலினி அவர்கள் மற்றும் அவரது மகன் செலவன் பாலமுருகன் அவர்கள் ஆகியோருக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜே.கே.பிரவின்குமார். இ.ஆ.ப. அவர்கள் பொன்னடை போர்த்தி பராட்டினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161